மொழியாராய்ச்சி

182/8B

பெரியார், ஈ. வெ. ரா.

வள்ளுவர் பதிப்பகம்
பவானி (வழி) ஈரோடு.

விலை அணா ஆறு

முதற்பதிப்பு

வள்ளுவர் ஆண்டு 1979

கி. பி. 1948

ராமு பிரஸ், பவானி.

முன்னுரை

மக்கள் ஒருவர் கருத்தை ஒருவர் தெரிந்து கொள்ளுவதற்குப் பயன்படுவதே மொழியாகும். உலகில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது மொழிகள் வழங்கி வருவதாக மொழியாராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர். அவற்றுள் பல மொழிகள் எழுத்தின்றி வாய்மொழியாகவே பேசப்பட்டு வருகின்றன. மிகச் சிலமொழிகளே "பேசவும் எழுதவும் படுதல், மிகப்பழமை, இலக்கியப் பரப்பு இலக்கண வரம்பும் உடைமை" என்னும் ஒரு மொழிக்குரிய முக்கலங்களும் உடையனவையாகும். அவை,

தமிழ், எகிப்தியம், சாலடியம், ஈபுரு, சீனம், மெக்சிகம், ஆரியம், கிரேக்கம், லத்தீன் முதலியனவையாம்.

தமிழொழிந்த மற்றைய வெல்லாம் பேச்சு வழக்கொழிந்து விட்டன. தமிழ் ஒன்றுதான் அமுழுப்பண்புடன் இன்றும் தன் இளமை நலங்குன்றாது நின்று நிலவி வருகிறது.

மற்றமொழிகள்போல் உரப்பியும், கனைத்தும், எடுத்தும், மூச்சுத் திணறியும் கூறவேண்டியதின்றி, இளங்குழந்தைகளும் வலியும் வருத்தமும் இன்றி எளிதில பேசும் இயல்பும் இனிமையும உடைய மொழி தமிழ் மொழியேயாகும். தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள்.

மக்கள் பேசிய முதன்மொழி தமிழ் மொழியே. "சூரியன் ஒரு நெருப்புருண்டை. அதிலிருந்து சிதறி ஆறிய ஒரு தீப்பொறியே இவ்வுலகம். குமரி முனைக்குத் தெற்கில் ஆயிரங்கல் அகன்றிருந்த கடல் கொண்ட நிலப் பாகமே முதலில் குளிர்ந்த பகுதி. அங்குதான் முதல் மாந்தர் தோன்றினர். அவர்கள் தான் தமிழ் மக்கள். ஆகவே, முதன் மக்கள் பேசிய மொழி தமிழ் மொழியே என்பது ஆராய்ச்சி அறிஞர் முடிவு. **பெருவள நாடு,**

தென்பாலி நாடு, குமரிக்கண்டம் என்னும் அத்தென்னிலப் பரப்பிலிருந்தே மக்கள் உலக முழுதும் பரவினர். கால, இட, நடக்கையில் வெவ்வேறு இனமாயினர். அந்த அந்த இடத்திற்கேற்றவாறு தங்கள் முதற்றாய் மொழியாம் தமிழ் மொழியைத் திரித்துப் பேசி வெவ்வேறு மொழியாக்கினர். மொழிவளர்ச்சிப்படி பல மொழிகள் தோன்றலாயின. பல மொழிகள் இறந்தும் போயின. உரப்பியும் கனைத்தும் உச்சரிக்கும் ஓசை வேறுபாடெல்லாம் அவ்வவ்விடங்களின் தட்பவெப்ப நிலைக்கேற்றவாறு உண்டானவையாகும்.

“பரிதியி லிருந்து சிதறிய உலகப்
பகுதியில் முதலினில் குளிர்ந்து
பெரிதுயிர் வகைகள் முதன் முதல் தோன்றப்
பெற்றது பழந்தமி ழகமே;
ஒருதமி ழகத்து மக்களே உலக
மக்களுக் கொருமுதல்; மக்கள்
தருமுதல் மக்கள் பேசிய மொழிசெந்
தமிழெனில் இதற்கிணை யெதுவோ?”

(இராவண காவியம்—தாய்மொழிப் படலம்—2.)

மக்கள் தரும் முதல் மக்கள்—மக்களைத் தோற்றுவித்த முதல் மக்கள்.

ஆரியர் இந்நாட்டுக்கு வருமுன் இந்தியாமுழுதும் தமிழ் மொழியே பேசப்பட்டு வந்தது. ஆரியர் குடியேறிய பின்னர், தமிழ் மொழி சிறுகச் சிறுக வடநாட்டை விட்டு விந்தமலைக்குத் தென்பகுதியளவாய்ச் சுருங்கிற்று. தமிழ் ஆரியக் கலப்பால் வடநாட்டில் பலதிரிபு மொழிகள் தோன்றின.

"சதுமறையா ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே"
(மனோன்மணீயம்.)

எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் ஆராய்ச்சியுரையை அறிக. சகம்—உலகம், இந்தியா.

புதைபொருளாராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்ட ஹரப்பா, மொஹஞ்சதரோ என்னும் அவ்விரு திராவிடர் நகரங்களும் இதற்கு அகச்சான்றாக விளங்குகின்றன.

"மத்திய மாகாண மலைகளிலுள்ள கோண்டர் பேசு மொழியும், ஒரிசாமலைகளிலுள்ள கோண்டர் பேசு மொழியும், வங்கநாட்டு ராஜ்மஹால் மலைகளிலுள்ள பாலர் பேசு மொழியும், சூடியாநாகப்பூர்ப் பக்கமுள்ள ஒராஒனர் மொழியும், பெலுசித்தானத்திலுள்ள பிராகுவியர் பேசு மொழியும் இன்னும் இமயமலைச்சாரல் முதலிய வடநாடுகளில் வழங்கும பல்வேறு மொழிகளும் பண்டைத் திராவிட மொழியின் திரிபுகளேயாகும்" எனக் **கால்டுவெல்** முதலிய மேனாட்டறிஞர்கள் கூறும் இதற்குச் சான்றாகும்.

நாளாகாக ஆரியத்தின் நெருக்கத்தால் தமிழ் நிலம்—திராவிட மொழி சுருங்கிக் கொண்டே வந்து, தொல்காப்பியர் காலத்தில் வேங்கடத்தை வடக்கெல்லையாகக் கொள்ளலானது.

இந்தியா முழுதும் பரவியிருந்த தமிழ் இன்றுள்ள நிலையில் உள்ள தமிழன்று. தெலுங்கு, கன்னடம், மலையாளம், கோண்டு முதலிய மொழிகள் பிரியாததற்கு முன்னிருந்த தமிழ். இப்போதுள்ள கடைச்சங்க நூற்றமிழ் செப்பஞ் செய்யப்பட்ட செந்தமிழாகும். அதற்கு முற்பட்ட தமிழ் பழந்தமிழ் ஆகும். இந்தியா முழுதும் பரவியிருந்த தமிழ் தொல்பழந்தமிழ் ஆகும்.

மொழியாராய்ச்சி வல்லுநா், உலக மொழிகளையெல்லாம் துரேனியம், ஆரியம், சேமியம் என மூன்று குலமாகவும், ஒவ்வொரு குலத்தையும் பல குடும்பங்களாகவும் பிரித்திருக்கிறார்கள். தமிழ், துரேனிய குலத்தைச் சேர்ந்த திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்தது என்கின்றனர் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலியன திராவிடக் குடும்பம் ஆகும்.

இவ்வாராய்ச்சி மிகப் பிற்பட்ட காலத்தே செய்யப்பட்டதாகும். அன்றுள்ள வட தென்னிந்திய மொழிகளைக் கொண்டு இவ்வாறு வகைப்படுத்தியுள்ளனர். 'இந்தியா' என்னும் பெயர் இந்நாட்டுக்கு முகமதியரால இடப்பட்ட பெயராகும். அதற்கு முன் தமிழகம் அல்லது திராவிடம் என்பதே இந்நாட்டின் பெயராகும். திரு ஆ இடம். திரு-செல்வம். ஆ—ஆதல். செல்வம்-நீர் நிலவளம். பல உயரிய மலைகளாலும், வற்றாத பல ஆறுகளாலும் வளம் பொருந்திய நாடு என்பதாம். வடநாடு ஆரிய மயமாகவே விந்தத்தின் தென்னிலப் பரப்புக்கு இப்பெயர் வழங்கலானது. திராவிடம் என்னும் பெயர இட்டுக் கட்டிய புதுப்பெயர் என்கின்றனர் சிலர் அறியார். ஆரியர் வருமுன்னிருந்து தமிழர்க்குத் திராவிடர் என்னும் பெயரும் வழங்கி வந்தது. திராவிடம்—தமிழ் வழங்கும் நிலம் என்பதும், (சிறப்புப் பெயராகாது.) திராவிடாச்சாரியார்—வேதாந்த சூத்திரத்திற்கு வடமொழி உரை செய்தவரிலொருவர் என்பதும், சிவஞான முனிவர் சிவஞான போதத்திற்குத் திராவிட மாபாடியம் செய்ததும், கால்டுவெல் திராவிட ஒப்பிலக்கணம் செய்ததும் இதற்கு அடிப்படையாகும். திராவிடம் என்பது நாட்டையும், அந்நாட்டில் வழங்கும் மொழியையும், அம்மொழி பேசும் மக்கள் நாகரிகத்தையும் குறிக்கும்.

கொங்கு நாட்டில் வாழ்வோர் கொங்கர், சோழநாட்டில் வாழ்வோர் சோழியர் எனப் பெயர் பெற்றதுபோல், தமிழ் அல்லது திராவிடமே தான் வழங்கும் இடத்துக்கு

எற்றவாறு முன்னர்த் தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனப் பெயர் பெற்றது.

தொல்காப்பியர் காலத்தே கன்னடம், தெலுங்கெல்லாம் தமிழ் மொழியாகவேதான் இருந்தன. ஆரியம் வடமொழி யென்னும் பெயருடன் வடநாட்டில் வழங்கிவந்தது. தமிழ் நாட்டில் வழங்கிய தமிழைச் **செந்தமிழ்** எனவும், செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த கன்னடம், தெலுங்கு முதலிய நாடுகளில் வழங்கிவந்த மொழிகள், செந்தமிழில் சிறிது மாறுபட்டு, கொச்சையாக இன்றுள்ள சென்னைத் தமிழ் போல வழங்கிவந்ததால் **கொடுந்தமிழ்** எனவும் வழங்கி வந்தனர். அம்மொழிச் சொற்களைச் செய்யுளில் எடுத்தாளும்போது அவை **திசைச் சொல்** எனவழங்கப் பெற்றன.

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

(தொல்-சொல் 400)

அப்பன்னிரு நிலமாவன:

பழந்தீவு, கொல்லம், கூபகம், சிங்களம், கன்னடம், வடுகம், கலிங்கம், தெலிங்கம், கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம் என்பன.

பழந்தீவு-மேல் கடலிலுள்ள பவளத்தீவு. இது சேரநாட்டைச் சேர்ந்திருந்தது. இத்தீவின் உரிமைப் பெயரினளே அருச்சுனன் மணந்த பவளக்கொடி என்னும் சேரன் மகள். சிங்களம்—இலங்கை. கொல்லம், கூபகம், கொங்கணம், குன்றகம்—மலையாளம். கன்னடம்—கருநடம் எனவும் வழங்கிறது.

ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு, பொதுங்கர்நாடு

என்பன பிற்காலத் தேற்பட்ட கொடுந் தமிழ் நாட்டுப் பிரிவுகள். இவற்றுள் சில தொல்காப்பியர் காலச் செந் தமிழ் நாட்டுள் அடங்கும். இக்காலத்தே முற்கூறிய பழந்தீவு முதலிய இடங்களில் வழங்கிய மொழிகள் மிகத் திரிந்து வேறு மொழிகள் ஆயினபோதும்.

எனவே, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், குடகம் என்னும் மொழிகள் தமிழே யன்றி வேறுமொழிகள் அல்ல. ஆரியக் கலப்பால் இபபோது வேறு மொழிகள் போல் தோன்றுகின்றன. ஆரியச் சொற்களை நீக்கிவிட்டுத் தமிழ் இயல்புப்படி பார்த்தால் அவை தனித்தமிழ் என்பது தெறறென விளங்கும். 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' என்பதே அவை தமிழ் மொழிகள் என்பதைத் தெளிவு படுத்தும்.

தமிழ் இலக்கணத்துள் ஆரியக் கொள்கையைப் புகுத்திய நன்னூலார், இந்தியாவிலும் அதைச் சுற்றியுள்ள நாடுகளிலும் வழங்குவன பதினெண் மொழி எனவும், ஆரியம் போலத் தெலுங்கு, கன்னடம் எல்லாம் வேறு மொழிகளே எனவும் கொண்டு, "ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தும்" (நன்-273) எனக் கூறியுள்ளார். நன்னூலுரையாசிரியர்கள் சீனம், பர்மியம் முதலிய மொழிகளையும் தெலுங்கு கன்னட மொழிகளோடு உடனெண்ணித் திசைச் சொல் என்றது அறிவுப புதுமை யாக இருக்கிறது.

திராவிட மொழிகள் : இன்று இந்திய நாட்டில் வழங்கும் திராவிட மொழிகள் 13. ஆரியத்தாக்குதலால் அவை சிதைந்து சில்லாந் கட்டியாய்ச் சிதறிப் போயின. அவற்றை அடுத்த பக்கத்திலுள்ள திராவிட நாட்டுப் படத்தில் காண்க. அவை திருந்திய திராவிட மொழிகள், திருந்தாத திராவிட மொழிகள், என இருவகைப்படும்.



திருந்திய திராவிட மொழிகள்	திருந்தாத திராவிட மொழிகள்
1. தமிழ்	1. கோண்டு
2. தெலுங்கு	2. கூ
3. கன்னடம்	3. ஓராயான்
4. மலையாளம்	4. ராஜ்மஹால்
5. து—துளு	5. பிராகுவி
6. கு—குடகு	6. துடா
	7. கோ—கோடா

மோ—மொகஞ்சதரோ. ஹ—ஹரப்பா

வட இந்திய மொழிகள்:— வடநாட்டில் குடியேறிய ஆரிய மொழித் தாக்குதலால் அங்கு திராவிட மொழி ஒழிக்கப்பட்டது. திராவிடத்துடன் ஆரிய மொழி கலந்ததால் அவ்வாரிய மொழி பிரிந்து பல மொழிகள் தோன்றின. அவையெல்லாம் ஆரிய மயமாய் வெவ்வேறு மொழிகளாக வழங்கி வருகின்றன.

அவை,

இந்தி, சிந்தி, லந்தி, பஞ்சாபி, குஜராத்தி, மராட்டி, ராஜபுதனி, குமோனி, கடிவாலி, நேபாலி, ஒரியா, வங்காளி, அஸ்ஸாமி, சினா, காஷ்மீரி, கோகிஸ்தானி, சித்ராலி, திராகி, பஷை, கலாஷா, கவர்படி, இந்துஸ்தானி, பார்சி முதலியன.

இனி, இந்தியாவின் பொது மொழி எனக் கூறப்படும் இந்தி மொழியே, மேல்நாட்டு இந்தி, கீழ் நாட்டு இந்தி, பிகாரி என மூன்று பெரும் பிரிவுகளும், ஒவ்வொன்றும் பல சிறுபிரிவுகளும் உடையதாக வழங்கி வருகிறது. அவற்றுள் ஓரிடத்தில் வழங்கும் இந்தி பிறிதோரிடத்தில் வழங்கும் இந்தியர்க்கு விளங்காது. அவையாவன,

1. **மேல்நாட்டு இந்தி:** 1. பாங்காரு, 2. பிரஜ்பாஷா, 3. கநௌஜி, 4. பந்தேலி, 5. உருது.
2. **கீழ்நாட்டு இந்தி:** 1. அவதி 2. பகேலி 3. சத்திஸ்கரி
3. **பிகாரி:** 1. மைதிலி, 2. போஜபுரி, 3. மகதி,

கங்கையின் மேற்கே பஞ்சாபின் தென்கிழக்கே பேசப்படுவது 'பாங்காரு'. வடமதுரைப் பக்கம் பேசப்படுவது 'பிரஜ்பாஷா'. கங்கை யமுனை இடைநாடுகளின் தெற்கில் பேசப்படுவது 'கநௌஜி'. நருமதை யாற்றிடங்களில் பேசப்படுவது 'பந்தேலி'. டில்லியில் பேசுவது 'உருது'. கீழ்நாட்டு இந்தியில் அவதியே முதன்மையுடையது. அது அயோத்தி நாட்டில் வழங்குகிறது. பிகாரிப் பிரிவு மூன்றில் மிதிலையில் பேசும் மைதிலியே முதன்மையானது.

இப்பொழுதில் இந்திதான் வடமொழிகளுக்குத் துணையாகத் தமிழ் நாட்டின் மேல் படையெடுத்துள்ளது.

இந்தி மொழி தமிழைப்போல் பழமையும் சிறப்பு முடைய மொழியன்று. கி. பி. 1175-க்குப் பின் துலுக்க மன்னர் டில்லி அரசாயினர். அப்போது அங்கு ஒரு வடமொழித் திரிபுமொழி வழங்கிவந்தது. அதுவெறும் பேச்சு வழக்கில் மட்டும் இருந்தது. நூல் வழக்கில்லை. துலுக்க மன்னர்கள் அரபி, பாரசீக மொழிச் சொற்களை அத்திரிபு மொழிக்கண் ஏராளமாகக் கலந்து 'உருது' எனப் பெயரிட்டனர். உருது என்னும் சொல்லுக்குப் 'பாசறை' எனபது பொருள். பாசறை—போர்வீரர் முகாம். உருது—பாசறை மொழி. பின் 'லல்லுஜிலால்' என்பவர் பாரசீக அரபிச் சொற்களை நீக்கிச் சமஸ்கிருதச் சொற்களை மிகுதியாய்க் கலந்து இந்தி மொழியை உண்டாக்கினர். கி. பி. 1400—1470-ல் 'ராமானந்தா' என்பவரால் ராமன் மேல் பாடிய பாடல்களே இந்தியின் முதல் நூலாகும். எனவே அது 'ஆதி கிரந்தம்' என வழங்குகிறது. கி. பி. பனிரெண்டாம் நூற்றாண்டில் தோன்றி, 500 ஆண்டுகளுக்கு முன் நூல் வழக்கில்லாமல் கல்வியறிவில்லா மக்களால் பேசப்பட்டு வந்ததே இந்தி மொழி ஆகும்.

ஒன்றுயொரு குலமாயிருந்த திராவிடரை ஏற்றத் தாழ்வான பல குலமாகப் பிரித்துப் பயன் துய்த்துவரும் ஆரியம் திராவிட மொழியையும் பல படியாகப் பிரித்துப் பாழ்படுத்தி விட்டது.

தாய் மொழியை உயிரினும் பெரிதாகப் போற்றி வந்த பழந்தமிழர் வழியில் வந்த பிற்காலத் தமிழர்களுக்குத் தாய் மொழிப் பற்றுக் குறையலானது. அதனால், ஆரியர் தங்கள் மொழியைத் தெய்வ மொழி என்றும், தமிழை மக்கள் மொழி என்றும், வடமொழியிலிருந்து தான் தமிழ் பிறந்தது. வடமொழியினும் தமிழ் தாழ்ந்தது என்றும் கூறிய பொய்யுரைகளை மெய்யென்று நம்ப

லாயினர். பின்னர், அகத்தியன் என்னும் ஆரிய முனிவன் தமிழை உண்டாக்கித் தந்தான் என்றதையும் ஆமாமெனச் சொன்றனர்.

"தேவ பாடையி னிக்கதை செய்தவன்"
(கம்ப ராமாயணம்)

"தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்"
(கம்ப ராமாயணம்)

"அகத்தியன் பயந்த செஞ்சொலா ரணங்கு"
(பாரதம், பாயிரம்)

பின்னர், அகத்தியர் சிவபெருமானிடந் தமிழைக் கற்று வந்து தமிழுக்குப் பேரிலக்கணம் செய்தா ரென்றும், அகத்தியர், காசியிலிருந்த வடமொழிப் புலவரோடு மாறு பட்டு அவ்வடமொழிக் கிணையா வேறொரு மொழியை அருளுமாறு ஆறுமுகனை வேண்ட, அவன் ஓரிடத்திற் கிடந்த ஓலைச்சுவடியைக் காட்ட, அகத்தியர் 'தமிழ் தமிழ்' என்று கூவி அவ்வோலைச் சுவடியை எடுத்து வந்து தமிழ் மொழியை இவ்வுலகின் கண் நிலவவைத்தனர் என்றும், கூறிய பொய்க் கூற்றுக்களையும் உண்மையென நம்பினர். பின் எப்படியேனும் தங்கள் தாய் மொழியாந் தமிழ் மொழி வடமொழியாகிய ஆரிய மொழிக்கு ஒப்பானதெனக் கூறிக்கொள்ள அரும்பாடுபட்டுள்ளனர் தமிழர் என்பதும் கீழ்வரும் செய்யுட்களால் தெரிகின்றன.

"விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வடமொழிக்குரைத் தாங்கியல் மலயமா முனிக்குத்
திடமுற வுறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்
மடமகட் கரங் கென்பது வழிதிநா டன்றே"
(திருவிளையாடல்)

விடை—எருது. விடை உகைத்தவன்—சிவபெருமான். பாணினி—'பாணினீயம்' என்னும் வடமொழி இலக்கணம் செய்தவன். மலயமுனி—அகத்தியன். வழுதிநாடு—பாண்டிநாடு.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி
அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந்
தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்
பாகரெனில்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே
கணித்தறிவார்"
(காஞ்சிப்புராணம்)

குடமுனி—அகத்தியன். கொல்லேற்றுப்பாகர்—சிவபெருமான்.

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ
ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர்
இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
இருமொழியும் நிகரென்னும் இதற்கைய
முளதேயோ?"
(காஞ்சிப்புராணம்)

இருமொழி—வடமொழி, தென்மொழி. கண்ணுதலார்-சிவன். முனிவேந்தர்—பாணினி, அகத்தியன்.

"ஆரியத்தோடு—உறழ்தரு தமிழ்த் தெய்வம்"
(சீகாளத்திப் புராணம்)

உறழ்தரு—ஒப்பான.

"அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த
செந்தமிழ்ப்பரமாசாரிய ஞெரிய அறுமுகக்கடவுள்"
(சிவஞான முனிவர்)

"அருமறையா கமங்க ளருங்கலைநூல் தெளிந்த
அகத்தியனுக் கோதுரைக்கும் அருட்குருவாங் குருவை'
குருவை—அறுமுகன். (சிவஞானசித்தியார்)

இவ்வாறு ஆரியத்திற்கு ஒப்பானது தமிழ் என்றுகூறிப் பெருமையடைந்து வந்த உண்மையறியாத தமிழரது சிறுமையைப் போக்கினர் மனோன்மணீய ஆசிரியர் திரு, சுந்தரம் பிள்ளை அவர்கள். தமிழ் ஆரியத்தின் குட்டியல்ல. ஆரியம் வருமுன் தமிழ் இந்தியாமுழுதும் பரவியிருந்தது. உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் பரம்பொருள்போல் உள்ளது தமிழ். ஆரியத்தாக்குதலால் கன்னடம் தெலுங்கு முதலிய மொழிகள் திரிபடையினும் அவ்வாரியம் உலக வழக்கழிந்தொழிந்தும் பண்டிருந்தது போல் இன்றும் இளமை நலங்குன்றாதிருக்கிறது தமிழ் எனத்துணிந்து கூறித் தமிழரைத் தட்டியெழுப்பலானார்.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தழித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி
இருப்பதுபோல்,
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா
ளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து
சிதையாஉன்
சீரிளமைத்திறம் வியந்துசெயல்மறந்து வாழ்த்துதுமே"
(மனோன்மணீயம்)

உதரம்—வயிறு. தமிழே அவ்வாறு திரிந்துளதென்பதாம்.

சமண பௌத்த வைணவ சமயப் பிரசாரங்களே கன்னட முதலிய திராவிட மொழிகள் வெவ்வேறு மொழி

களாகப் பிரிந்துபோனதற்கு ஏற்ற காரணங்களாகும். அம்மொழி வழங்கும் பகுதிகளில் அயமதங்களின் பிரசாரகர்கள் ஏராளமான வடசொற்களைக் கலந்து பிரசாரம் செய்து தனி மொழிகளாக்கி விட்டனர். தமிழிலுங் கூடப் பெரும்பாலான சமயச் சொற்கள் வடசொல்லாக இருத்தலே இதற்குச் சான்றாகும்.

கன்னட முதலிய திராவிட மொழிகள் கி. பி. 9-ம் நூற்றாண்டுக்கு முன் நூல் வழக்குப் பெறவில்லை.

1. **கன்னடம்:**— கி. பி. 850-ல இருந்த 'ராஷ்ட்ர கூட' அரசனான நிருபதுங்கன் அவைக் களப் புலவரான ஸ்ரீவிஜயர் என்பவர்தான் 'கவிராஜமார்க்கம்' என்னும் நூலைக் கன்னட மொழியில் செய்தார். இதற்குமுன் கன்னடத்தில் நூல் இல்லை. 1369-க்குப் பின் வசவ புராணம், பாரத, இராமாயணம், பாகவத மொழிபெயர்ப்பு நூல்கள் செய்யப்பட்டன. 1000 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கிய கன்னடம் தனித் தமிழ். சைன, வீரசைவ, வைணவப்புலவர்கள் கையாண்டது வடமொழிச் சொற்கள், கதைகள் ஏராளம். பழைய தனிக் கன்னட நூல் ஒன்றும் கிடைக்கவில்லை.

2. **தெலுங்கு:**— கி. மு. 180-ல் ஆந்திர மரபு தோன்றியது. அந்த ஆந்திரர் அல்லது அண்டிரர் பேசியது தமிழே. தமிழ் வள்ளல்களில் ஒருவனான ஆய் என்பவன் இம்மரபினனாவன். 'ஆய் அண்டிரன்' 'வாய்வாளண்டிரன்' என்னும் சங்க நூற்றொடர்களால தெளிக. தெலுங்கு மொழியில் பழைய நூல்கள் இல்லாமையே இவர்கள் தமிழ் பேசினதற்குச் சான்றாகும். கி. பி. 11-ம் நூற்றாண்டில் இருந்த நன்னயப்பட்டர் பாரதத்தை மொழி பெயர்த்ததிலிருந்தே தெலுங்கு மொழி நூல் வழக்குடைய மொழியாயிற்று. அம்மொழி பெயர்ப்பில் ஒரு பங்கு தெலுங்குச் சொல், இரண்டு பங்கு வடசொற்கள்.

3 **மலையாளம்:** — சேர அரசர்களில் கடைசி அரசர் சேரமான் பெருமாள் நாயனார் என்பவர். அவர் ஆட்சியைவிட்டுச் சென்றது கி. பி. 825. இதிலிருந்துதான் கொல்லம் ஆண்டுத் தொடக்கம். இவரால் சிவபெருமான் மேல் பாடப்பட்ட தமிழ்ப்பா மாலைகள் கைலாச உலா, அந்தாதி, நான்மணிமாலை முதலியன. எனவே சேரமான் காலத்தில் மலையாள நாட்டில் (சேர நாடு) தமிழ்தான் வழங்கிவந்ததென்பதில் ஐயமில்லை. கி. பி. 1350-ல் கண்ணசப் பணிக்கர் இராமாயணத்தை மொழி பெயர்த்தார்.

இதில் சிற்சில வடசொற்களே கலப்பு. 1550-ல் செருச்சேரி நம்பூதிரி என்பவர் 'கிருஷ்ணகதா' என்னும் நூலைத் தனி மலையாளத்தில் செய்தார். 1650-ல் எழுத்தச்சன் பாரதம் முதலிய நூல்களில் தொகுதி தொகுதியாக வடசொல்லைக் கலந்து மலையாளத்தைப் பாழ்படுத்தி விட்டனர்.

இம்மூன்று திராவிட மொழிகளிலுமுள்ள வடசொற்களை நீக்கி அவ்விடங்களில் தமிழ்ச் சொற்களை இடின் அம்மொழியும் கலப்பற்ற தூய தனித் தமிழாகிவிடும். திராவிட நாடு திராவிடர்க் கானால் இதை மிக எளிதில் செய்து கொள்ளலாம். நாடகி தனது கோலத்தை மாற்றுவது போன்றது இது.

பெரியார் அவர்களது மொழியாராய்ச்சி உண்மையான மொழியாராய்ச்சியாகும். இதுநாள் வரை திராவிட மொழிகளைப் பற்றி ஆராய்ந்தவர்களெல்லாம் தமிழ் தெலுங்கு முதலிய மொழிகளையெல்லாம் வெவ்வேறு மொழிகளாகக் கொண்டே ஆராய்ந்தனர். அதனால் அவர்களெல்லாம் உண்மை காணமுடியாது ஏதோ தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் உரைக்கலாயினர். தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, குடகு எல்லாம் ஒரே மொழி. எல்லாம் திராவிட மொழியே. ஒன்றிலிருந்து மற்றவை தோன்றவில்லை. வேறெனவும், தோன்றின

எனவும் திரிபாக எண்ணி விட்டோம். எல்லாம் தமிழே—திராவிடமே என்பதைத் தமது நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சியாலும், நெடுநாளையப் பயிற்சியாலும், தமது நடுநிலைமையாலும் விளக்கிக் கூறுகிறார். மறுக்க முடியாத ஆராய்ச்சி. திராவிடர் எல்லாம் 'நாம் ஒன்று' என்னும் உணர்வு பெறுவதற்கு ஏற்றகருவி. திராவிடத் தனியரசின் அடிப்படை.

ஒவ்வொரு திராவிடரும் படித்துத் திராவிட இனவுணர்ச்சி கொள்ளும் பொருட்டு இந்நூலை வெளியிடுகிறோம். திராவிட மக்கள் உடனடியாக வாங்கி ஆதரித்து இதுபோன்ற பல நூல்கள் தொடர்ந்து வெளியிடும்படி எம்மை ஊக்குவிப்பார்களாக.

வாழ்க திராவிடம்.

பவானி
15-4-48

வள்ளுவர் பதிப்பகத்தார்.

மொழியாராய்ச்சி

தமிழில் நான் எந்த அளவும் பள்ளியில் பயின்றவனல்ல. தமிழைப்பற்றி, தமிழ் மக்கள் நலம், தமிழ் மக்கள் தன் மதிப்பு என்பதல்லாமல் வெறும் மொழியைப் பற்றியே நான் எவ்விதப் பிடிவாதங் கொண்டவனுமல்ல.

மொழியும் மதமும்: முதலாவதாக, தமிழ் முன்னேற்றமடைந்து உலக மொழிவரிசையில் இதுவும் ஒரு மொழியாக இருக்கவேண்டுமானால், தமிழையும் மதத்தையும் வெவ்வேறாகப் பிரித்துவிடவேண்டும். தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பையும் கொஞ்சமாவது தள்ளிவைக்க வேண்டும்.

மத சம்பந்தமற்ற ஒருவனுக்குத் தமிழில் இலக்கியம் காண்பது மிகமிக அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணங்கூட மதத்தோடு பொருத்தப்பட்டே இருக்கிறது.

உதாரணமாக, 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்றார் தொல்காப்பியர். 'மக்கள் தேவர் நாகர் உயர்திணை' என்றார் நன்னூலார்.

இதன் பொருளென்ன? நரகர் என்பவர் யார்? தேவர்கள் யார்? இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது?

பள்ளிப் பாடங்கள்: இனி, பள்ளிக்கூடங்களில்பிள்ளைகளுக்குத் தமிழ் இலக்கிய நூல்கள் எவை? கம்பராமாயணம், பாரதம், பாகவதம், பெரியபுராணம், தேவாரம், திருவாய்மொழி போன்ற மதத்துவங்களும், ஆரிய மததத்துவம் என்னும் ஒரு தனிப்பட்ட வகுப்பின் உயர்வைப் போதித்துத் தமிழ் மக்களை ஞானமற்றவர்களாக்கும் ஆபாசக்களஞ்சியங்களும் அல்லாமல் வேறு இலக்கியங்கள் காணப்படுகின்றனவா? இன்றையத் தமிழ்ப்புலவர்களுக்கு உலகஞானத்தைவிடப் புராண அறிவுதானே அதிகமாயிருக்கின்றது?

மேனாட்டுப்புலவரும், தமிழ்ப் புலவரும்: மேல்நாட்டுப் புலவர்களுக்கும், மேல் நாட்டு இலக்கியங்களுக்கும் இருக்கும் பெருமையும், அறிவும் நம் தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கின்றன என்று சொல்ல முடியுமா? ஷேக்ஸ் பியர் வேண்டுமா? இங்லாந்து வேண்டுமா? என்றால், ஓர் ஆங்கில மகன் ஷேக்ஸ்பியர் வேண்டும் என்பானும். தமிழர்களாகிய நாம் எதைக் கேட்பது?

இந்தியா வேண்டுமா? கம்பராமாயணம் வேண்டுமா? என்றால் உண்மைத் தமிழ்மகன் என்ன சொல்லுவான்? இரண்டு சனியனும் வேண்டாம் என்று தானே சொல்லுவான்.

மேல்நாட்டில்தான் அறிவாளிகள் உண்டென்றும் கீழ் நாட்டில் அறிவாளிகள் இல்லை என்றும் நான் சொல்ல வரவில்லை. மேல்நாட்டு அறிவாளிகள் தாங்கள் செய்த இலக்கியங்களை மதசம்பந்த மில்லாமல் செய்து வைத்தார்கள். அதனால், நூற்றுக்கணக்காக மேல்நாட்டு இலக்கியங்களும் புலவர்களும் போற்றப் படுகிறார்கள்.

கீழ்நாட்டில், குறிப்பாக இந்தியாவில் எத்தனை இலக்கியங்கள், எத்தனை புலவர்கள் உலகத்தாரால் போற்றப் படுகிறார்கள்? தாகூர் அவர்கள் கவிக்கு ஆகப் போற்றப் படலாம். ஆகையால், மதம் கடவுள் சம்பந்தமற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைப்பற்றிய இலக்கியம், எவரும் மறுக்கமுடியாத விஞ்ஞானத்தைப் பற்றிய இலக்கியம் ஆகியவை மூலந் தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மை யடைய முடியும் என்பது மாத்திர மல்லாமல், அதைக்கையாளும் மக்களும் ஞானமுடையவர்கள் ஆவார்கள்.

இழிவு பெருகவா இலக்கியம்? பெரியோர்களே!

கம்பராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இருந்து என்ன பயன்? ஒருவன் எவ்வளவுதான் பட்டினி கிடந்தாலும் மலத்திலிருந்து அரிசி

பொறுக்குவானு? அதுபோல் தானே கம்பராமாயண இலக்கியம் இருக்கிறது? அது தமிழ் மக்களை எவ்வளவு இழிவாகக் குறிப்பிட்டிருக்கிறது, தமிழரின் வரலாற்றுக் கால எதிரிகளை எவ்வளவு மேன்மையாகக் குறிப்பிட்டிருக்கிறது. சுயமரியாதையை விரும்புகிற ஒரு தமிழன் எப்படிக் கம்பராமாணய இலக்கியத்தைப் படிப்பான்? இன்று கம்பராமாயணத்தால் தமிழ் மக்களுக்கு இலக்கியம் பரவிற்று? இழிவு பரவிற்று? என்று நடுநிலையில் இருந்து எண்ணிப்பாருங்கள்.

தமிழின் பெருமை: தமிழ் மொழியின் பெருமை, பரமசிவனுடைய உடுக் கையிலிருந்து வந்ததென்றோ, பரமசிவன் பார்வதியிடம் பேசிய மொழியென்றோ, சொல்லி விடுவதாலும், தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததாலும், முதலை உண்ட பாலனை அழைத்ததாலும், எலும்பைப் பெண்ணாக்கினதாலும் சிறந்ததாகி விடாது. இந்த ஆபாசக் கதைகள் தமிழ் வளர்ச்சியையும், மேன்மையையும் குறைக்கத்தான் பயன்படும்.

எப்படி?: பரமசிவனுக் குகந்தமொழி தமிழ்என்றால், வைணவனும் துருக்கனும் தமிழைப் படிப்பதே பாவமல்லவா? அன்றியும், அப்படியிருந்தால் பார்ப்பான் தமிழ் மொழியைச் சூத்திரமொழி என்றும், அதைக் காதில் கேட்பதே பாவம்என்றும் சொல்லுவானு? யோசித்துப்பாருங்கள்.

பார்ப்பனர் தமிழ்ப்பற்று: இன்று தமிழ்நாட்டில்வந்து, தமிழ்கற்று வயிறு வளர்ப்பவர்களாகிய பார்ப்பனர்களே இநதிமொழி இந்தியா மொழியாக வேண்டும் என்று முயற்சித்து வருகிறார்கள். அரசக [கோர்ட்] மொழி, அரசாங்க மொழி ஆகியவை எல்லாம் இந்தியமாக வேண்டும் என்கிறார்கள். காரணம் கேட்டால் இந்தி மொழியில் துளசிதாஸ் ராமாயணம் நன்றாய் விளங்கு மென்கிறார்கள். பார்த்தீர்களா பார்ப்பனர் தமிழ் பற்றை?

தமிழ்ப்புலவர் நிலை: தமிழ்ப் புலவர்களுக்கு இதைப் பற்றிச் சிறிதும் கவலை இருக்கிறது என்று சொல்ல முடிய வில்லை. தமிழ்த் புலவர்கள் இந்த அரசியல் வாதிகளின் கூச்சலுக்கும், பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்கும் பயந்து கொண்டு வாயைமூடிக் கொண்டு இருக்கிறார்கள்.

வடமொழியும் பார்ப்பனரும்: பார்ப்பனர்கள் செத்த பாம்பாகிய சமஸ்க் கிருதத்தை எடுத்து வைத்துக்கொண்டு எவ்வளவு ஆட்டம் செய்கிறார்கள்! பொதுப்பணம் அவ்வட மொழியின் பேரால் எவ்வளவு செலவாகிறது! பொது மக் களின் வரிப்பணம் சமஸ்க்கிருதத்துக்காக ஏன் ஒரு பைசா வாவது செலவாக வேண்டும்? தமிழ் மக்கள் யாரும்இதைப் பற்றிக் கவனிப்பதில்லை. தமிழ், தமிழ்என்று எங்கோ ஒரு மூலையில் இரண்டு பேர்கள் தான் சத்தம் போடுகிறார்கள். ஆனால், சமஸ்க்கிருதத்திற்கும், இந்திக்கும், சட்டசபை உறுப்பினர்கள், உயர் நீதிமன்ற ஜட்ஜிகள் முதல் எல்லாப் பார்ப்பன அதிகாரிகளும் பாடுபடுகிறார்கள். நம்மபெரிய அதிகாரிக்கோ, செல்வாக்கும் செல்வமும் உள்ளவர் களுக்கோ தங்கள் தாய்மொழியாந் தமிழைப்பற்றிக் கவலை யும் இல்லை, தமிழைப்பற்றி அதிகப் பேருக்கு ஒன்றும் தெரியவும் தெரியாது.

தமிழும் தமிழரும்: தமிழினிடத்தில் ஒரு தமிழன் பற்றுடையவனாக இருந்தாலே அவன் தேசத்துரோகி, வகுப் புவாதி, பார்ப்பனத்துவேஷி எனறெல்லாம் ஆய்விடுகிறான். தூற்றப்படுகிறான். தமிழின் பரிதாபநிலைக்கு இதை விட வேறு என்ன வேண்டும்.

காலத்துக் கேற்ற மாறுதல்: தமிழர்: தமிழ் மொழியில், தமிழ் எழுத்தில் ஒரு சிறு மாற்றமோ, முற்போக்கோ செய்யக்கூட ஒரு தமிழ் அபிமானியும் முயற்சிப்பதில்லை. யாராவது முயற்சித்தாலும் அதற்கு ஆதரவளிப்பதும் இல்லை. தற்கால நிலைக்குப் போதியதாகவும், ஏற்றதாகவும், நலமுள்ளதாகவும் ஆக்க யார் முயற்சித்தார்கள்?

மேல் நாட்டார்: மேல் நாட்டு மொழிகள் எவ்வளவு மாற்றமடைந்து வருகின்றன? எழுத்துக்களில் எவ்வளவு மாறுதல் செய்து வருகிறார்கள்? ரஷ்யாவில் சில பழைய எழுத்துக்களை எடுத்து விட்டுப் புதிய எழுத்துக்கள் உண்டாக்கிக் கொண்டார்கள். அமெரிக்காவில் எழுத்துக்கூட்டும் முறையை (Spelling) மாற்றி விட்டார்கள். துருக்கியில் துருக்கி மொழிக்கு உண்டான எழுத்துக்களையே அடியோடு எடுத்து விட்டு ஆங்கில எழுத்துக்களை வைத்துக் கொண்டார்கள். தமிழர்கள் தமிழுக்காக, நமக்கு விவரம் தெரிந்த காலமுதல் என்ன காரியம் செய்தார்கள்? காலத்துக் கேற்ற மாறுதலுக்கு ஒத்து வராதவன் மானமுடன் வாழ முடியாது. மாறுதலுக்கு மனிதன் எத்தனமாக (ஆயத்தம்) இருக்க வேண்டும். முன்னேற்றம் என்பதே மாறுதல் ஆகும் என்னும் உண்மையை உணர்ந்தவனே உலகப் போட்டிக்குத் தகுதியுடையவனாவான்.

தமிழ் எழுத்துத்திருத்தம்: நான் தமிழ் எழுத்துக்களில் ஒரு சில மாற்றம் செய்தேன். பலபுலவர்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னைப் பாராட்டினார்களே யல்லாமல் ஒருவராவது அம்முயற்சிக்கு ஆதரவு அளிக்கவில்லை எவ்வளவு பெரிய காரியத்தையும் செய்ய நான் தயார். ஆனால், தகுதி உள்ளவர்கள் எவரும் வெளிவராவிட்டால் நான் ஒருவனும் என்செய்வது? என்னைக் குறைகூறவோ, திருத்தவோ முயற்சிப்பதன் மூலமாகவாவது இதற்கொரு வழிபிறக்காதா என்றுதான் துணிந்து அத்தமிழ் எழுத்துச் சீர்திருத்தச் செயலில் இறங்கினேன் இதுவரை யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை. (பெரியார் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்: ணு, று, று, ணை, னை, ளை, லை, இவ்வேழெழுத்துக்களையும் ணா, னா, றா, ணை, னை, லை, ளை, இவ்வாறு மாற்றியமைத்துத் தமது பத்திரிகையில் கையாண்டு வருகிறார். ஏழெழுத்து மிச்சம் ஆகிறது.)

திராவிடர்: திராவிட மொழியைப்பற்றிக் கூறுமுன் அம்மொழி பேசும் திராவிடரைப் பற்றிச் சிறிது கூற

ஆசைப்படுகிறேன். திராவிடம் என்பது நமது நாட்டினுடைய பெயராகும். திராவிடர் என்பது இந்நாட்டின் பழங்குடி மக்கள் இனத்துக்கு ஏற்பட்ட உலகப் பெயராகும். திராவிடர் என்பதை நடமில்சிலர் மறுக்கிறார்கள், வெறுக்கிறார்கள். திராவிடர் என்பது என்ன நாம் கற்பித்த ஒரு பெயரா? இது இன்று நேற்று ஏற்பட்டதல்லவே. ஆரியர் என்ற பெயர் தோன்றிய அன்று ஏற்பட்ட பெயர் தானே திராவிடர் என்பது? நீக்ரோ, மங்கோலியர் என்ற பெயர்கள் ஏற்பட்டதும் அன்று தானே? திராவிடர் என்ற பெயரை மனுதர்ம நூலில் காணலாமே. இராமாயணத்தில் பாரதத்தில், பகவத்தில் கூட இதற்கு ஆதாரம் உண்டுமே. இந்த நாட்டைப் பொருத்த வரையில இதுவரைக்கும் இருந்து வரும் போராட்டமெல்லாம் ஆரியர் திராவிடர் போராட்டமே ஒழிய, வடமொழி, தென்மொழிப் போராட்டமல்லவே. இதற்கு எவ்வளவோ ஆதாரங்கள் காட்டலாமே.

வடநாட்டுத் தென்னாட்டுப் போராட்டம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. புராண கால முதற் கொண்டு இருந்து வந்திருக்கிறது. இதிகாசங்களுக் கெல்லாம் முந்தியது புராணம், புராணங்களுக் கெல்லாம் முதன்மையானது கந்தபுராணம். கந்த புராணத்திலேயே இந்தவடநாடு தென்னாடு போராட்டம் துவக்கப்பட்டு விட்டது. அதிலுள்ள சிறு கதையைக் கேளுங்கள். கதை கற்பனையாக இருந்தாலும் அதிலுள்ள கருத்தைக் கவனித்துப் பாருங்கள். ஆரியக்கடவுளாகிய சிவனுக்கும் (ஆரியர் தலைவன்) பார்வதிக்கும் வடநாட்டில் திருமணம நடக்கிறது. அப்போது தேவர்கள் (வடநாட்டவர்-ஆரியர்கள்) தென்னாடு உயர்ந்து விட்டதையும் வடநாடு தாழ்ந்து விட்டதையும் சிவனிடம் வருத்தத்துடன் கூறுகிறார்கள். சிவன் தென்னாட்டைத் தாழ்த்த வேண்டி அகத்தியனை அனுப்புகிறார். அகத்தியன் தெற்குநோக்கி வருகிறான். திராவிட நாட்டின் வடக்கெல்லையான விந்திய மலை அவனைத் தடுக்கிறது அகத்தியன் சினந்து அம்மலையை அழுத்திவிடுகிறான். (அங்குள்ள மக்

களை வென்று விடுகிறான்) மேலும் தெற்கு நோக்கிச் செல்கிறான். வாதாவியும் வில்வனும் தடுக்கிறார்கள். அவர்களையும் வென்று கொண்டு போய்த் தென்னாட்டில் இராவணனுடைய ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து, தமிழை உண்டாக்கினான். அதாவது முதலில் மொழியில்தான் அகத்தியன் கைவைத்தான். மொழியை ஒழிக்கும் வேலைதான் இவர்கள் முதல் வேலை. இது தான் இவர்களின் நடைமுறைப் பழக்கம்.

இயற்கைப் போராட்டம்: இந்த வடநாட்டுத் தென்னாட்டுப் போராட்டம் நான் துவக்கியதல்ல. கந்தபுராண காலத்திலே வாதாவியில் துவக்கப்பட்டது. இது ஆரியப் புராணம் கூறுவது. அன்று தொட்டு இடைவிடாது இருந்துவரும் இயற்கைப் போராட்டந்தான். ஆரியம் ஒழிந்து, ஆரியர்கள் அத்தனைபேரும் திராவிடர்களாகும் வரையிலும் அல்லது அவர்கள் அத்தனைபேரும் திராவிட நாட்டைவிட்டு வெளி யேறும் வரையிலும் இப போராட்டம் இருந்தே தீரும்.

அறிவுகாட்டிய பிரிவினை. உடற் கூற்று வல்லுநர்கள் அந்தந்த நாட்டுத் தட்ப வெப்பத் திற்கேற்ப அமைந்த அங்க மச்சஅடை யாளங்களைக் கொண்டு பாகுபடுத்திக் கொடுத்த இனப் பெயர் தானே ஆரியர் திராவிடர் என்பவை. இப்பிரிவுகள் தேவர்களாலோ, கடவுளாலோ உண்டாக்கப்பட்ட பிரிவுகள் அல்லவே. அறிவுள்ள மக்களால் பிரிக்கப்பட்டு, மற்றவர்களால் ஒப்புக் கொள்ளப் பட்டு, வழக்கத்தில் இருந்து வரும் பெயர்கள் தானே இவை? இவர்களைப் பிரிக்க இரத்தப்பரீட்சை செய்ய வேண்டியதில்லையே. ஆடையின்றிப் பிறந்த மேனியாய் நிறுத்தினால் கூட இவன் ஜப்பானியன், இவன் நீக்ரோ, இவன் திராவிடன், இவன் ஆரியன் என்று பிரித்து விடலாமே. நாய்களைப் பிரிக்க வில்லையா நாம்? இது கோம்பை, இது புல்டாக், இது சிப்பிப்பாறை, இது ராஜபாளையம், இது சீமை என்று? குதிரையைப் பிரிப்ப தில்லையா நாம்? இது

அரபிக் குதிரை, இது ஆஸ்ட்ரேலியாக் குதிரை, இது வே தாரணியத்தட்டு என்றும் இவற்றையெல்லாம் பிரிக்கும் போது மக்களைத்தான் பிரிக்கமுடியாது? இது போகட்டுமே நாம் பிறவிபார்த்து இனப்பிரிவினை செய்யும்படி கேட்க வில்லையே. அவரவர்கள் கொண்டாடும் உரிமைகளைக் கொண்டுதானே பிரிக்கும்படி சொல்கிறோம். இரத்தப் பரீட்சை செய்தாலுங் கூட, பாடுபட்ட பாட்டாளித் திராவிடனுடைய இரத்தத்திற்கும் பாடுபடாத சோம்பேறிப் பார்ப்பானுடைய இரத்தத் திற்கும் வித்தியாசம் இருக்கக் கூடுமே.

தமிழர் திராவிடர்: தமிழர் என்பது மொழிப் பெயர். திராவிடர் என்பது இனப்பெயர். தமிழ் பேசும் மக்கள் யாவரும் தமிழர் என்ற தலைப்பில் கூட முடியும். ஆனால், தமிழ்பேசும் அத்தனைபேரும் திராவிடர் ஆகிவிடமுடியாது. இனத்தால் திராவிடனை ஒருவன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாயிருந்தாலும், எந்த மொழி பேசுபவனா யிருந்தாலும் அவன் திராவிடர் என்ற தலைப்பில்தான் சேர்வான். ஆகையால், திராவிடமொழி தமிழ் என்ற காரணத்திற்காகத் தமிழ் பேசும் திராவிடன் அல்லாத ஒருவன் மொழி காரணமாகமட்டுமே தன்னைத் திராவிடனென்று கூறிக் கொள்ள முடியாது. தமிழர் என்றால் பார்ப்பானும் தன்னைத் தமிழனென்று கூறிக் கொண்டு, நம்முடன் கலந்து கொண்டு மேலும் நம்மைக் கெடுக்கப் பார்ப்பான். திராவிடர் என்றால் எந்தப்பார்ப்பானும் தன்னைத் திராவிடன் என்று கூறிக் கொண்டு நம்முடன் சேர முற்பட மாட்டான். அப்படி முன் வந்தாலும், அவனுடைய ஆசார அனுஷ்டானங்களை யும், பேத உணர்ச்சியையும் விட்டுத் திராவிடப் பண்பை ஒப்புக்கொண்டு, அதன்படி நடந்தாலொழிய நாம் அவனைத் திராவிடன் என்று ஒப்புக் கொள்ள மாட்டோம்.

இழிவு நீக்கவழி: பண்டைத்திராவிட மக்களின் பழக்க வழக்கங்களை ஒட்டி, அதில் ஏதாவது தவறு இருக்குமானால் அதையும் களைந்துவிட்டு, ஒரு திராவிடன் இப்படித்தான்

நடந்துகொள்ள வேண்டு மென்று ஏற்பாடு செய்தால், அவ் வேற்பாட்டுக்கு உட்பட்டு நடக்க ஒப்புக் கொள்பவனைத் தான் திராவிடன் என்று கூறுவோமே யல்லாது, சி. பி. இராமசாமி ஐயரையும், கோபாலசாரி ஐயங்காரையும், ராஜகோபாலாச்சாரியாரையும் கூட அவர்களின் பண்பு திரா விடப்பண்பாக மாறும்வரை திராவிட இனத்தில் சேர்த்துக் கொள்ள மாட்டோமே! தமிழர் என்பதில் இவ்வளவு நிபந் தனை உண்டா? இதைத்தவிரத் திராவிடர் என்பதில் எங்க ளுக்கு வேறென்ன உள்ளெண்ணம் இருக்க முடியும்? எங் கள் நடத்தையிலோ, அன்பிலோ உங்களுக்குச் சந்தேகம் எழத்தான் என்ன காரணம் இருக்க முடியும்? தமிழர் என் பதில் நான் சேர்க்க நினைத்த அத்தனை பேரையும் சேர்க்க வும், நான் விலக்க நினைத்த, நமக்கு மாறுபட்ட கலாச்சார முடைய கூட்டத்தை விலக்கவும் வசதியுண்டா? இழி வுக்கும் தாழ்வுக்கும் கட்டுப் பட்டுள்ள மக்களையும், இதற்கு நேர்மாறாக இவ்வழிவுக்கே காரணமான உயர் ஜாதி மக்களையும் ஒன்றாக்கிக் கொண்டால் அதில் இவ்விழிவு நீக் கவழிஏற்படுமா! முதலில்இவ்விழிவு நீங்கட்டும், பிறகு எல்லோரும் ஒன்றுவோம்.

இந்த இழிவு நீக்கந்தான் நமது முதல்திட்டம், அடுத் தது, எந்த ஒரு திராவிடனும் திராவிடன் அல்லாத ஒருவ னுக்கு அடிமையாக இருக்கக்கூடாது என்பது தான். சமுதாயத்தில் திராவிடமக்கள் இழிமக்களாகவும், கடையர் களாகவும், சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும், சண்டா லர்களாகவும் பாவிக்கப்பட்டு வருநிலைமாறி, பிறவி காரண மாயுள்ள இம்முன்னேற்றத் தடைகள் நீக்கப்பட வேண்டும். அரசியலில் திராவிடன் எந்த ஒரு அபலானுடைய ஆதிக்கத் துக்கும் கட்டுப் பட்டவனாக இருக்கக்கூடாது. திராவிடர் ஒவ்வொரு வருக்கும் பிறவி காரணமாயுள்ள இழிவு நீங்கப் பெற்று, திராவிடன் அல்லாத ஒருவன் ஆதிக்கம் செலுத்தாத உண்மை விடுதலை, பூரண சுதந்திரம் பெற்று வாழ வழி செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் எமது ஆசை.

ஆரியத்தின் முன்: இந்நாட்டுக் கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும், தம்மைத் திராவிடர் அல்ல வென்று கருது வார்களானால், தம்மைச் சூத்திரர் அல்லவென்று கருது வார்களானால் அதைப்பற்றியும் நமக்குக் கவலை இல்லை. ஆனால், உண்மையில் ஆரியம் அவர்களைச் சூத்திரருக்கும் தாழ்ந்தவராக, அதாவது **மிலேச்சர்கள்** என்பதாகத்தான் கருதிவருகிறது என்பதை அவர்கள் உணரவேண்டும். வைசியன் தன்னை ஆரிய வைசியன் என்று கூறிக் கொண்டாலும், ஆசாரி தன்னை விஸ்வப் பிராமணன் என்று கூறிக் கொண்டாலும், கவுண்டன் தன்னைத் தேவேந்திரகுல வேளாளன் என்று கூறிக் கொண்டாலும், படையாட்சிதன்னை வன்னியகுல க்ஷத்திரியன் என்று கூறிக் கொண்டாலும் ஆரியம் இவர்கள் அத்தனை பேரையும் சூத்திரன் என்ற பிரிவில் ஒன்றாகத் தான் கருதி வருகிறது என்பதையும், கோவிலில் ஒரு குறிப்பிட்ட வரையில்தான் இவர்கள் அத்தனைபேரும் போகமுடியும் என்பதையும் இவர்கள் உணர வேண்டுகிறேன்.

திராவிடர் என்பதேன்: பிராமணர் பிராமண மகா சபை வைத்துக் கொள்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பெருமையும் உரிமையும் கிடைக்கின்றன. நாம் நம்மைச் சூத்திரர் என்று கூறிக்கொண்டால் உயர் ஜாதியானுக்கு அடிமையாயிருக்கும் உரிமைதான் கிடைக்கும்; பார்ப்பானின் தாசிமக்கள் என்றபட்டம்தான் கிடைக்கும். அந்தச் சூத்திரத் தன்மையை ஒழிப்பதையே நமது முக்கிய வேலையாகக் கொண்டிருப்பதால் தான், அப்பெயரால் எவ்விதச்சலுகையோ, உரிமையோ கிடைக்காததால் தான் அப்பெயருள்ள இழிவுகாரணமாகத் தான், அத்தலைப்பில் அதே இழிதன்மையுள்ள திராவிடராகிய முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், வைசியர்கள், க்ஷத்திரியர்கள், வேளாளர்கள், நாயுடு, கம்மவார், ஆந்திரர், கன்னடியர், மலையாளிகள், ஆகியவர்களெல்லாம் ஒன்றுசேர மறுத்து விடுவார்கள். ஆதலால்தான், நாம் நம்மைச்சூத்திரர் என்று கூறிக் கொள்ளாமல் திராவிடர் என்று கூறிக் கொள்கிறோம். சூத்திரர்

என்பவர்களுக்குத் "திராவிடர்" என்பது தவிர்த்து வேறு பொருத்தமான பெயர் யாராவது கூறுவார்களானால், அதை நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு எனது அறியாமைக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் தயாராயிருக்கிறேன். நீங்கள் கொடுக்கும் பெயரில் நான் மேலே கூறிய அத்தனைபேரும் ஒன்றுசேர வசதியிருக்க வேண்டும். அதில் சூத்திரன் அல்லாத ஒரு தூசுகூடப் புகுந்து கொள்ள வசதி யிருக்கக் கூடாது. அயலார் புகுந்து கொள்ளாமல் தடுக்க ஏதாவது தடை இருக்க வேண்டும். திராவிடர் என்று கூறினால், திராவிடர் அல்லாத பார்ப்பான் அதில் வந்து புகுந்து கொள்ள முடியாது. நாம் ஒழிக்கப் பாடுபடும் பிறவி காரணமான இழிதன்மையும் அவர்களுக்கு இல்லை. ஆகவே, அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் காரணமில்லை.

ஆரியன்: ஆரியராவது திராவிடராவது? அதெல்லாம் இன்றில்லை என்பீர்கள். இங்கே வாருங்கள், பேசாமல் மேல்துண்டு போட்டுக் கொண்டு நாலு வருணத்தாரும் கோயிலுக்குப் போங்களேன். பார்ப்பான் உங்களை எல்லாம் ஒரே இடத்தில் விட்டு விட்டு உள்ளே நுழைகிறானா இல்லையா பாருங்களேன். நீங்கள் தொட்டால் தீட்டுப் பட்டு விடும் என்றுகூறித்தவனைபோல் எட்டிக் குதிக்கும் ஆள்தான் ஆரியன். உன்பார்வை பட்டால் ஆகாரமும் கெட்டுவிடும் என்றுநினைப்பவன்தான் ஆரியன். நீதொட்டால் குழவிக்கல்சாமி செத்து விடும் என்று கூறி, உன்னை உள்ளே விடாமல் தடுப்பவன் தான் ஆரியன். உன்னுடைய மொழியை நீச்சமொழி, கடவுளுக்குப் புரியாத மொழி என்று கூறி உன்னை ஏமாற்றிக் காசு பறிப்பவன் தான் ஆரியன். இந்த வித்தியாசம் நீங்கிற்று? இந்த இழிவு ஒழிந்து போயிற்று? ஒழிந்து போயிருந்தால் நான் ஏன் இதுபற்றிப் பேசுகிறேன்? இவ்வாறு உயர்வுதாழ்வு பிறவி காரணமாக வேறெந்த நாட்டிலாவது உண்டா? வேறெந்த நாட்டிலாவது இப்படி உயர் ஜாதி என ஏமாற்றிப் பிழைக்கும் பாப்பனர் உண்டா?

“ஒட்டியர், மிலேச்சர், ஊணர், சிங்களர்,
இட்டிடைச் சோனகர், யவனர், சீனத்தர்
பற்பலர் நாட்டிலும் பார்ப்பார் இலை. (ஆல்)
முற்படைப் பதனில்வே ருகிய முறைமைபோல்
நால்வகைச் சாதிஇந் நாட்டினில் நாட்டினீர்”
(கபிலரகவல்)

எனக் கபிலர் என்னும் சங்கப்புலவர் இல்லையென்று கூறுவதைக் கவனியுங்கள்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம், நான்கும் ஒரேமொழி; தனித்தனி மொழியல்ல

தமிழன், தெலுங்கன், கன்னடியன், மலையாளி இவர்கள் பேசுவதெல்லாம் தமிழ்தான். இவர்கள் பேசுவது வெவ்வேறு மொழியென்று கூறுபவன் தமிழ் மகனல்லன்; தமிழை அறியாதவன்; ஆரியத்திற்குச் சோரம் போனவன்; நம்மைக் காட்டிக் கொடுத்து ஆரிய ஆதிக்கத்திற்கு ஆக்கந் தேட முயற்சிப்பவன். இவை நான்கும் வேறு வேறு மொழி என்று கூறுபவர்களைத் தமிழர் என்று தம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறலாமே தவிர, இவர்களைத் தமிழறிந்தவர்கள் என்று நாம் ஒப்புக் கொள்ள முடியாது.

ஆரிய ஆதிக்கச் சூழ்ச்சி: மொழி வாரி மாகாணம் பிரிக்கப்படப் போகிறது. அதுதான் பிரிந்து போகட்டும் என்றால், மொழி வாரிக் கவிஞர்கள் நியமிக்கப்பட்டு, மொழிவாரி இலக்கணங்களும் செய்யப்பட்டுத் திராவிட மொழியைப் பாழாக்கத் திட்டம் தீட்டியாகி விட்டதே! இந்நான்கு மொழிகளும் ஒரே மொழிதான் என்ற கருத்து மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கியதும் ஆரிய ஆதிக்கம் அதைக்கெடுக்க, அவை ஒன்றல்ல, தனித் தனி என்று பிரித்துக் காட்ட முற்பட்டு விட்டதே.

திராவிடத்தாயின் ஒரே மகள்தான் தமிழ்: நமது பண்டிதர்களில் சிலர் இவை நான்கும் ஒன்றிலிருந்து வந்தவை. ஒரே தாய்வயிற்றில் பிறந்து வளர்ந்த நாலு அக்கை தங்கைகள் என்று கருதுகிறார்கள். இது பித்தலாட்டம் என்பதுதான் என்கருத்து. இத்திராவிடத் தாய்க்குப் பிறந்தது ஒரே மகள் தான். அதுதான் தமிழ். அந்த ஒன்றைத்தான் நாம் நாலு பெயரிட்டு அழைக்கிறோம். நாலு இடத்தில் பேசப்படுவதால் நாலு பெயரில் வழங்குகிறதே ஒழிய, நாலிடத்திலும் பேசப்படுவது தமிழ்தான். நாலும் ஒன்றிலிருந்து உண்டானவை என்று எண்ணுவதுதான் தவறு. ஒன்று தான் நான்காக நமது அறியாமையால் கருதப்பட்டு வருகிறது. இதை நிரூபித்துக் காட்டவும் என்னால் முடியும்.

ஆரியம் பிரித்து வைத்தது: நான்கு தனியிடங்களில் வாழ்ந்து வந்த மக்களுக்குள் போக்கு வரவும், அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பமும் முன் காலத்தில் இல்லாததால், ஆங்காங்குள்ள மக்கள் தமிழைப் பேசிவந்தமுறை சிறிது வேறுபடவும், அதைச் சாதகமாக வைத்துக்கொண்டு, நம்மை நாலு சாதியாசப் பிரித்துவைத்த ஆரியம், நம்மொழியையும் நான்காகப் பிரித்து, வேண்டுமளவும் வடமொழியை அவற்றுள் புகுத்தி, அதற்கேற்ற வண்ணம் எழுத்து, இலக்கணம் முதலியவற்றை உண்டாக்கிச் சிறிது வேறு உச்சரிப்பாக இருந்த தமிழைத் தனித் தனி மொழியென்று சொல்லும்படி செய்து விட்டது. தமிழ் மக்கள் தங்களுக்குள் உள்ள வகுப்பு வேற்றுமையால் இக்குறைபாட்டைப் பற்றிச் சிந்திக்காமல், இதன் உட்காரணத்தையும் கண்டு பிடிக்காமல், தமிழ் நாடிலுள்ள தமிழைத்தவிர மற்றைய மூன்றும் கிளை மொழிகளென்றும், தமிழில் இருந்து தோன்றிய மொழிகளென்றும், நாட்டுப் பெயரையே மொழிக்குக் கொடுத்துப் பிரித்து விட்டார்கள். அன்றையத் தமிழ்ப் பண்டிதர்கள் ஆரியத்திற்கு அடிமைப் பட்டிருந்ததால் அதைத் தடுத்தார்களில்லை. இன்னும் நமது பண்டிதர்களுக்கு அந்த ஆரியமோகம் தீர்ந்தபாடில்லை.

ஒன்று, நான்காக வகுக்கப்பட்டது என்பதற்கும், ஒன்றிலிருந்து நான்கு பிறந்தன, கிளைத்தன என்பதற்கும் வேற்றுமையுண்டு. ஆகவே, தமிழ், நீண்ட தொடர்பற்ற காரணத்தால் நான்காகப் பிரிந்திருக்கிறதேயல்லாமல், தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை தோன்றியவை அல்ல, உண்டாக்கப் பட்டவை அல்ல என்று திராவிடர் உணரவேண்டும். இந்த உண்மை தெரிந்து கொண்டாலொழிய இந்த நான்கு நாட்டாருக்குள்ளும் வேற்றுமையுணர்வு தோன்றாமலிருக்காது. இந் நான்கும் தமிழ்மொழியேதான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

அத்தனையும் தமிழ்: ஆரிய மோகம் அற்ற நான்கு மொழிப் பண்டிதர்களும் ஒன்றாக உட்கார்ந்து, நான்கு மொழியகராதிகளையும வைத்துக் கொண்டு, ஆரியனல்லாத ஒரு வடமொழிப் பண்டிதனை நீதிபதியாய் வைத்துக் கொண்டு, தமிழ் தவிர்த்த மற்ற மூன்று அகராதிகளிலுமுள்ள வடசொற்களையும், பிற சொற்களையும் நீக்கிவிட்டால் எஞ்சியிருப்பவை அத்தனையும் தமிழ்ச் சொற்களாகவே இருப்பதைக் காணலாம். நூற்றுக்கு ஐந்துகூடத் தமிழ் அல்லாதசொல்லாக இருக்காது. அதற்குள்ள நீட்டலையோ, குறுக்கலையோ நீக்கிவிட்டுப் பார்த்தால் அவையுந் தமிழாகவே முடியும். அவ்வாறு அயற் சொற்களை நீக்கிய பிறகு நூற்றுக்கு எண்பது இன்றுள்ள வழக்குத் தமிழ்ச் சொற்களாகவும், பத்து தற்போது வழக்கத் திலில்லாமல், நம்பழந் தமிழ் இலக்கியங்களில் இருந்துவரும் சொற்களாகவுந்தான் இருக்கும்.

இன்று வேண்டுமானால் நீங்கள் 50 ஆண்டுகளுக்கு முன் அச்சிட்ட ஒரு மொழிவாரிச் சொன்னாலை (ஒக்கப் பலேரி) எடுத்துப்பாருங்கள். எல்லாம் தமிழ்ச் சொற்களாகவே இருப்பதைக் காணலாம். அதைச் சுருக்கமாகச் சில உதாரணங்களால் விளக்குகிறேன்.

சொல்லாராய்ச்சி: நாம் குடியிருக்கும் இடத்திற்குத் தமிழில் 'வீடு, இல், மனை, பொறை' என்று பெயர். ஒரு தெலுங்கனும் 'இல்' என்றுதான் சொல்கிறான். ஒரு கன்னடியன் 'மனை' என்கிறான். ஒரு மலையாளி 'பொறை' என்கிறான். தமிழன் தாகத்துக்குக் குடிப்பபதை 'நீர்' என்கிறான். தெலுங்கன் 'நீளு' என்கிறான். கன்னடியன் 'நீரு' என்கிறான். மலையாளி 'வெள்ளம்' என்கிறான். 'ஆற்று வெள்ளம்' எனவே, 'வெள்ளம்' என்பதும் தமிழ்ச் சொல்தான். வீடு, இல், மனை, பொறை, நீர், நீளு, நீரு, வெள்ளம் இவை எல்லாம் தமிழ்ச் சொற்கள் தானே.

நாம் 'எனக்கு' என்று தமிழில் கூறுவதைத் தெலுங்கில் 'நாக்கு' என்றும், கன்னடியன் 'நெனக்கி' என்றும், மலையாளி 'எனக்கி' என்றும், கூறுவான். பார்ப்பான் 'நேக்கு' என்று கூறுவான். அதைப்போலவே, 'உனக்கு' என்பது தமிழ். 'நீக்கு' என்பது தெலுங்கு. 'நோக்கு' என்பது பார்ப்பனத் தமிழ்.

'அவர்கள்' 'அவர்' என்பதைத் தெலுங்கர் 'வாளு' 'வாரு' என்கிறார்கள். கன்னடியர் 'அவுரு' என்கின்றனர். பார்ப்பனர் 'அவா, இவா, வந்தா, போனா என்று மொண்ணை யாகவே, மொக்கையாகவே பேசுகிறார்கள். நம்மிற்பலரும் அதைப் பெருமையாக நினைத்து அம்மாதிரியே பேசி வருகிறார்கள்.

'அகத்துக்கு' என்பதைப் பார்ப்பனர் 'ஆத்துக்கு' எனத்திரித்துக் கூறிவருகிறார்கள். இந்த நேக்கையும், நோக்கையும், ஆத்தையும், அவா, இவாவையும் தமிழென்று கூறும்போது, இல், மனை, பொறை, நீளு, நீரு, வெள்ளம், நாக்கு, நெனக்கி, எனக்கி என்று கூறும் மக்களைத்தானா வேறுமொழி பேசுவோர் என்று ஒதுக்கவேண்டும்? தமிழ் நாட்டுப் பார்ப்பனரை யெல்லாம் ஒரு தனியிடத்தில் வைத்துவிட்டால் இவர்கள் பேசுவது தெலுங்கு, கன்னடம், மலையாளத்தைவிட வேறு மொழியாகத்தானே கொள்ள வேண்டியிருக்கும்.

நாம் 'அங்கே' என்பதை ஒருவன் 'அக்கடே' என்றும், ஒருவன் 'அவடே' என்றும் கூறுகிறான். இச்சிறு வேறு பாட்டின் காரணமாக இவை வெவ்வேறு மொழியாக்கப் படலாமா? 'அங்கிட்டு' என்று வழங்குந் தமிழர் வேறு மொழியாளரா?

நாம் 'ஆ' என்பதைத் தான் தெலுங்கன் 'ஆவு' என்றும், கன்னடியன் 'அசு' என்றும், மலையாளி 'ஆல்' என்றும் கூறுகிறான். ஆன் என்பதுதான் ஆல் என்று திரிந்திருக்கும். இச்சிறுமாறு பாட்டினாலா இவை நான்கு மொழிகளாக்கப் படவேண்டும்?

தமிழ் நாட்டில் ஒரு கோட்டத்தில் (ஜில்லா) இருக்கும் சொல் மற்றொரு கோட்டத்தில் இல்லை. ஒரு கோட்டத்தில் ஒரு பொருளுக்குப் பயன்படுத்தும் சொல்லை மற்றொரு கோட்டத்தில் வேறு பொருளுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஒரே கோட்டத்தில் வெவ்வேறு ஒலியாக உச்சரிக்கிறார்கள். வழிச்கு வெட்டி, பாட்டை என்னும் சொற்கள் கோவையில் இல்லை. 'கொல்லை' என்ற சொல் தமிழ் நாட்டில் சில இடங்களில் சக்கூசுக்கு வழங்குகிறது. சில இடங்களில் வீட்டின் பின் வாசலுக்கு வழங்கி வருகிறது. சில இடத்தில் விளை நிலத்தைக் குறிக்கிறது. தமிழ் நாட்டில் கோவைக் கோட்டத்தில் நகர மக்கள் பேச்சு நாட்டு மக்களால் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை.

தமிழிலுள்ள ஒருபொருட்பல சொற்களே ஒவ்வொரு நாட்டிலுந் தனித்தனியாக வழங்கி வெவ்வேறு மொழியாக நிற்கின்றன. உதாரணமாக, வீடு என்ற சொற்பொருளைத் தரத்தமிழில் மனை, இல், அகம், அறை வளைவு என்ற சொற்களுள்ளன. இவையே கன்னடத்தில் மனை என்றும், தெலுங்கில் இல் என்றும். மலையாளத்தில் அறையென்றும். பார்ப்பனச் சேரியில் அகல் என்றும் வழங்குகின்றன. இப்படிப் பல ஆயிரக் கணக்கான சொற்களை எடுத்துக் காட்டலாம்.

ஒரே உதிரம்: எனவே, இவ் நான்கும் ஒரு உதிரத்திலிருந்து உதித்தெழுந்தவையல்ல. அந்த உதிரமேதான் இவை நான்கும். என்னருந்தமிழே! நீயேதான் தெலுங்கு, நீயேதான் கன்னடம், நீயேதான் மலையாளம் என்று தான் நான் கூறுவேன். இதை நமது மக்களுக்கு உணர்த்தி ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மக்கள் என்ற ஒன்று பட்ட நிலையை உண்டாக்கவேண்டும்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் மொழிகள் வேறு மொழிகளுமல்ல, கிளை மொழிகளுமல்ல. ஆரியர்கள் தெலுங்கு முதலிய மொழிகளைத் தங்களுக்கு இசையந்ததாக்கி அம்மொழி மக்களை ஏய்த்து வசப்படுத்தித் தங்கள் மொழியிலக்கணத்தையும் அமைத்தும் கொடுத்து விட்டார்கள்.

தமிழர்களுக்கு, குறிப்பாகத் தமிழ்ப் பண்டிதர்களுக்குச் சிறிதாவது இனப்பற்று இருந்திருக்குமானல், ஆரியர்களுடைய இந்தத் தந்திரம்-சூழ்ச்சி வெற்றி பெற்று, நம் மக்கள் இவ்வளவு பிரிவினைக்கும், வேற்றுமைக்கும் ஆட்பட்டிருக்க முடியாது. தெலுங்கர், கன்னடியர், மலையாளிகட்குள்ள மொழிப் பற்றில், உணர்ச்சியில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு நூற்றில் ஒரு பங்குகூட இல்லை.

அவை வெவ்வேறு மொழிகளாய் இருப்பதால் நமக்கென்னகேடு எனின், தமிழகத்தைச் சுற்றி மூன்று புறத்திலுமுள்ள மக்கள் ஆரியபயமாய் இருந்தால் அது நமக்குத் தொல்லையாகவும், பல துறைகளில் தடையாகவும் இருக்காதா? திராவிடநாடு திராவிடர்க்கு ஆனல் இந்தக் குறைபாடுகளை எளிதில் தீர்த்துக் கொள்ளமுடியும். மற்றும் தெலுங்கர், கன்னடியர், மலையாளிகளைத் தமிழர்களாக்க வேண்டுமானல் **திராவிடர்** என்று சொல்லித்தான் ஆக்க முடியும். திராவிடமே தமிழ், தமிழே திராவிடம் என்னும் புத்துணர்ச்சியைத் திராவிடமக்கள் பெறுவார்களாக.

ராமு பிரஸ், பவானி.